புதுச்சேரி அரசு

# தொழிலாளர் துறை

## தலைமை தொழிற்சாலைகள் மற்றும் கொதிகலன்கள் ஆய்வகம்

எண்:1235/CIF&B/A7/2022 தேதி :

51-வது தொழிற்சாலைகளுக்கான

# தேசிய பாதுகாப்பு வாரம்

04.03.2022 முதல் 10.03.2022 வரை

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விபத்துகளை தடுக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 4-ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தேசிய பாதுகாப்பு வாரம் நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டுவருகிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளால் உயிர்சேதம், பொருட்சேதம் மற்றும் பல இழப்புகள் ஏற்படுகின்றன. இதனால் தொழிலாளர்களும், தொழிற்சாலை நிர்வாகத்தினரும் பாதிக்கப்படுகின்றனர். விபத்துகள் நடைபெறாவண்ணம் தடுக்கவும், தொழில் சார்ந்த நோய்களைக் கட்டுப்படுத்தவும், ஒவ்வொரு தொழிற்சாலையும் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள், போட்டிகள் நடத்தியும், மற்றும் பாதுகாப்பு படக்காட்சிகள் காண்பித்தும் தொழிலாளர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த பாதுகாப்பு வார விழாவின் நோக்கமாகும்.

எனவே, புதுச்சேரி மாநிலத்தில் செயல்படும் அனைத்து தொழிற்சாலைகளும் அவரவர் தொழிற்கூடங்களில் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த போட்டிகள் மற்றும் படக்காட்சிகள் நடத்துமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு தலைமை தொழிற்சாலைகள் ஆய்வகத்தால் இந்த ஆண்டும் தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு பற்றிய பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பாதுகாப்பு வார விழா நிகழ்ச்சிகளின் நிறைவு விழாவின் போது பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்படும்.

"இள மனங்களில் பாதுகாப்பு கலாச்சாரத்தை
உருவாக்கி பேணி வளர்ப்போம்"

சுதந்திரத்தைவிட சுகாதாரமே
மிக முக்கியமானது - மகாத்மா காந்தி

**S.D. சுந்தரேசன், இ. ஆ. ப.**
**தொழிலாளர் துறை செயலர் மற்றும்**
**தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர்**